
## முரசொலிக்கு கடைசியாக நள்ளிரவில்

# முரசொலி செல்வம் எழுதிய ‘ஒரு கேள்வி - ஒரு பதில்’!

**முரசொலி செல்வம் அவர்கள் கடைசியாக 09.10.2024 அன்று நள்ளிரவில் முரசொலிக்காக தன் கைப்பட எழுதி அனுப்பிய ‘ஒரு கேள்வி ஒரு பதில்’ பெட்டிச் செய்தி:**



**கேள்வி:** அரசு நிகழ்ச்சிகளுக்கு தி.மு.க. சின்னம் பொறித்த ‘டி.சர்ட்’ அணிந்து துணைமுதலமைச்சர்கலந்துகொண்டு மரபு மீறி செயல்படுவதாக முன்னாள் அமைச்சர்ஜெயக்குமார்கூறியுள்ளாரே?

**பதில்:** **கருப்பு, வெள்ளை, சிகப்பு பார்டர் பொறித்த கட்சிச் சின்ன கரை வேட்டிகளை அணிந்து அவருடைய கட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். முதல் எடப்பாடி பழனிச்சாமி வரை முதலமைச்சர்களாக பல அரசு விழாக்களில் கலந்துகொண்டதும் மரபு மீறலா? உ.பி.யில் காவி உடையிலேயே ஒரு முதல்வர் உலா வருகிறாரே; அது எத்தகையச் செயல்? விளக்குவாரா ஜெயக்குமார்?**

(10.10.2024 - முரசொலியில் 3 ஆம் பக்கத்தில் வெளி வந்தது! )

# முரசொலி செல்வம் மறைந்துவிட்டார்! அவர் புகழ் வாழ்க!!



முரசொலி செல்வம் மறைந்துவிட்டார் எனும் செய்தி எனக்கு மிகுந்த அதிர்ச்சியைத் தந்தது. அக்டோபர் 8 ஆம் தேதி ஒரு ஆய்வுப் பூர்வமான கட்டுரையை முரசொலியில் எழுதியிருந்தார். ஆளுநர் ரவியை தனது வாதத்திறமையினால் - அவரது அறியாமையை அவர் அந்தக் கட்டுரையில் வெளிப்படுத்தி இருந்தார்.

அக்.9 ஆம் தேதி இரவு முரசொலிக்கு ‘ஒரு கேள்வியும் ஒரு பதிலும்’ என்கிற பெட்டிச் செய்தியை அனுப்பி இருந்தார். அன்றே கேலிச் சித்திரம் ஒன்றிற்கு வெளியிட ஒப்புதலும் வழங்கி இருந்தார். 10 ஆம் தேதி முரசொலியில் அவை இடம் பெற்றிருந்தன. வாசகர்கள் அதனைப் படித்தார்கள்.

ஆனால் 10 ஆம் தேதி காலை 10.00 மணியளவில் முரசொலி செல்வம் மாரடைப்பால் இயற்கை எய்தினார். இந்தச் செய்தி பரவிய போது நாம் பெரிதும் அதிர்ச்சிக்கு ஆளானோம். பத்திரிகையாளனாக, எழுத்தாளனாகப் பணியாற்றிக் கொண்டே அவர் மரணத்தைத் தழுவினார். ‘தீய என்பன கனவிலும் நினைவிலா சிந்தை’ என்று தூய வாழ்வு வாழ்ந்த மனிதர்களைப் பற்றி சேக்கிழார் சொல்லுவார். அதற்கு இலக்கியமாய் திகழ்ந்தவர் முரசொலி செல்வம்!

**முரசொலி செல்வம் அதிகார ‘தோரணை’ அறியாதவர். அமைதியாக இருப்பவர். அறிவார்ந்தவர்; ஆழக் கற்றவர். நண்பர்களைப் புன்னகையோடு வரவேற்பவர். உரையாடி மகிழ்பவர். விவாதிப்பவர். வரலாற்றைப் பிழைபட எழுதுவோரைத் தாக்கத் தயங்காதவர். அவர் இன்றில்லை; எனும் ‘பெருமை’யைப் பெற்றவராகிவிட்டார்.**

இந்தக் காகிதத்தில்தான் எழுத வேண்டும் என்று எண்ணாதவர். பழுப்பேறிய பழைய காகிதத்திலும் நிறுத்தி நிதானித்துப் படிப்பதற்கு அய்யமில்லாமல் முரசொலிக்கு எழுதுவார்.

பெரியார் ஒரு பக்கம் பயன்படுத்தப்பட்டு மறுபக்கம் வெறுமையாய் உள்ள தாளில் எழுதுவார். அறிஞர் அண்ணா, ‘சைனீஸ்ரப் எனும் நியூஸ் பிரிண்டில்’ எழுதுவார். கலைஞர் ‘சன்லிட் பாண்டிலும்’ ‘மேப்லித்தோவிலும்’ ஒழுங்காக நறுக்கப்பட்ட தாளில் எழுதுவார். முரசொலி செல்வம் கிடைத்த தாளில் எழுதுவார். இன்று அவர் இல்லை. அவர் ‘இருந்தார்’ ஆனார்.

**அவர் தி.மு.க.காரர்; ஆனால் பொதுமேடையில் பேசியதில்லை. கழகப் பதவிகளில் இருந்ததில்லை. கழகத்தின் சார்பில் சட்டமன்ற, நாடாளுமன்ற பதவிகளை அலங்கரித்ததில்லை. நியமனப் பதவிகளைக் கூட பெற்றதில்லை.**

ஆனால் அவர் எழுத்தைப் போர்க் கருவியாக்கினார். பேனா அவர்க்கு ஆயுதத்தை வடித்தெடுக்கும் உலைக்களம் ஆயிற்று. கோணல் கருத்தை அதில் தட்டி நிமிர்த்தினார். அந்த மனிதர் இன்று இல்லை. இயற்கை நம்மிடமிருந்து பறித்து விட்டது.

**முரசொலி மாறன், முரசொலி செல்வம் இருவரும் கலைஞர் கட்டிய கோட்டை மதிலில் பொருத்தப்பட்ட இரு பீரங்கிகளாக இருந்தனர். இன்று அவர்கள் ‘ஒரு கால செயல்களாக’ ஆகி விட்டனர். ஆம்; அவர்கள் வரலாற்று நினைவுகளாகிவிட்டனர். ஆனாலும் முரசொலி ஒலித்துக் கொண்டே இருக்கிறது. அந்த ஒலியில் அவர்கள் ஒளிர்கிறார்கள்.**

முரசொலி செல்வம் மறைந்து விட்டார். ஆனால் முரசொலி ஒலித்துக் கொண்டே இருக்கும். அதில் அவர் புகழ் வாழ்க எனும் சங்கநாதம் கேட்டுக் கொண்டே இருக்கும்.

**- க.திருநாவுக்கரசு**

(திராவிட இயக்க ஆய்வாளர்)

## அமைச்சர் - முனைவர் கோவி. செழியன் தலைமையில்

# உயர்கல்வித் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

சென்னை, அக். 12-

உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தலைமையில் நேற்று முன்தினம் (10.10.2024) உயர்கல்வித் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், உயர்கல்வித் துறையின் கீழ் இயங்கும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், கல்லூரிக் கல்வி இயக்ககம், தமிழ்நாடு ஆவணக் காப்பகம், தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம், தேசிய உயர்கல்வித் திட்டத்திற்கான (RUSA) மாநில இயக்குநரகம், அறிவியல் நகரம், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம், தமிழ்நாடு மாநில உருது கழகம், தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம் மற்றும் தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம் ஆகிய துறைத் தலைவர்களுடன் துறை நடவடிக்கைகள் மற்றும் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள், உன்னதமான பல சாதனைகளைப் படைக்கும் உயர்கல்வித் துறையின் பொற்காலம் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சி காலத்தில் தொடங்கிற்று, தற்போது, அந்த பாதையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூடுதல் கவனத்துடன் கூடுதல் நலத் திட்டங்களோடு பயணிக்கிறார் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், உயர்கல்வித் துறையினால் செயல்படுத்தப்படும் திட்டங்களான, அரசு பள்ளி மாணாக்கர்களுக்கான 7.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு, முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கான கல்விக் கட்டணச் சலுகை, முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித்தொகை, முதலமைச்சரின் ஆராய்ச்சி மானிய திட்டம், தொழிலக உட்பயிற்சி. கட்டணமில்லாப் பேருந்து பயணச் சலுகை, பெருந்தலைவர் காமராஜர் கல்லூரிகள் மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களை மாணாக்கர்களுக்கு உரிய முறையில் சென்றடைவதை உறுதி செய்யுமாறு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்

மாணாக்கர்களின் சேர்க்கை எண்ணிக்கை உயர்ந்துள்ளது, கல்லூரிகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது, கூடுதல் பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன இவை எல்லாம் பெருமைக்குரிய செய்திகள் என்றாலும், கல்வியின் தரத்தினை நாம் உயர்த்திட தற்போது முனைப்பு காட்ட வேண்டும் என்றும் துறை சார்ந்த அறிவிப்புகளை குறித்த காலத்திற்குள் செயல்பாட்டிற்கு கொண்டு வர தனிக்கவனம் செலுத்துமாறும், பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பணிகளை காலதாமதமின்றி விரைவாக முடிக்குமாறும், உயர்கல்வித் துறையின் கீழ் வரும் அனைத்து துறைகளின் காலிப் பணியிடங்களை விரைந்து நிரப்பப்படுவதை உறுதி செய்யுமாறும், துறை ரீதியாக கலந்தாலோசனை மேற்கொண்டு பணிகளை தொய்வின்றி விரைந்து முடிக்குமாறும், நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகளை விரைந்து முடிக்கு மாறும், வேலைவாய்ப்பு திறனை உள்ளடக்கிய கல்வி முறையை முன்னெடுக்கவும் மாறி வரும் சூழ்நிலைக்கு ஏற்ற கல்வி முறையை பின்பற்றுமாறும் அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அரசின் கொள்கை முடிவு, நிதி ஆதாரம் மற்றும் நீதிமன்ற நிலுவை வழக்குகள் ஆகியவற்றினால் ஏற்படும் சுணக்கம் தவிர, கோப்புகள் காலதாமதம் ஆவதால் ஏற்படும் சுணக்கம் நடைபெறா வண்ணம் அலுவலர்கள் தங்கள் பணியை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உயர்கல்வித் துறை அலுவலர்களை அறிவுறுத்தினார்.

புதுமைப் பெண், நான் முதல்வன் மற்றும் தமிழ்ப் புதல்வன் ஆகிய திட்டங்களை பொதுமக்களிடமும் மாணாக்கர்களிடமும் உரிய முறையில் கொண்டு சென்று, அத்திட்டங்களின் மூலம் அனைத்து மாணாக்கர்களையும் முதல்வராக திகழ்வதற்கு வழிவகையை உருவாக்குமாறு அறிவுறுத்தினார்.

மேற்படி ஆய்வுக் கூட்டத்தில், உயர்கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். கே. கோபால், தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்ற துணைத் தலைவர், டாக்டர். எம். பி. விஜயகுமார், , முதன்மைச் செய லாளர் / மாநில திட்ட இயக்குநர் டாக்டர். சீ. ஸ்வர்ணா, முதன்மைச் செயலாளர் / துணைத் தலைவர், அறிவியல் நகரம், தேவ் ராஜ் தேவ், தொழில்நுட்பக் கல்வி இயக்கக ஆணையர், த.ஆபிரகாம், கல்லூரிக் கல்வி இயக்கக ஆணையர் திருமதி. எ. சுந்தரவல்லி, உயர்கல்வித் துறை இணைச் செயலாளர், முனைவர். துரை. இரவிச்சந்திரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மறைந்த “முரசொலி செல்வம் அவர்களுக்கு அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அஞ்சலி செலுத்தப்பட்டது. அயோத்தியாப்பட்டணம் பேருந்து நிலையம் முன்பு அவரது திருவுருவப்படத்திற்கு தெற்கு ஒன்றிய செயலாளர் ஏ. விஜயகுமார் தலைமையில் தி.மு.க.வினர் அவரது திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினர். இதில் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் செந்தில்குமார், மாவட்ட பிரதிநிதிகள் அகரம் ராஜேந்திரன், சின்னத்தம்பி, இன்ப ராஜா, ஒன்றிய துணைச் செயலாளர் ஹரி அய்யாதுரை, ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஆறுமுகம், அருண்குமார், பேரூராட்சி அவைத்தலைவர் வேடன், பேரூராட்சி துணைத் தலைவர் செல்வ சூரிய சேதுபதி, கவுன்சிலர் திருமுருகன், ஒன்றிய பொருளாளர் பழனிவேல், முன்னாள் ஒன்றிய பொருளாளர் திருமலை வெங்கட்ராசு, கிளை கழக செயலாளர் நடேசன், சுந்தர், ராஜேந்திரன், குணசேகரன், வெள்ளாள குண்டம் கணேசன்,விஜய் சங்கர், கௌரி சங்கர் கூட்டுறவு வங்கி முன்னாள் செயலாளர் ராஜேந்திரன், ராஜவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

## முரசொலி செல்வம் மறைவு:

# தனது எழுத்துகளால் மக்கள் மனதில் இடம் பிடித்தவர்!

## எர்ணாவூர் நாராயணன் இரங்கல்!

சென்னை, அக்.12–

சமத்துவ மக்கள் கழகத் தலைவர் எர்ணாவூர் நாராயணன் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் மருமகனும் முரசொலி நிர்வாக ஆசிரியரும் முரசொலி மாறன் சகோதரருமான பத்திரிக்கையாளர் எழுத்தாளருமான முரசொலி செல்வம் அவர்கள் காலமான செய்தி கேட்டு மிகுந்த வேதனை அடைந்தேன்.

முரசொலியில் தனது பொன் எழுத்துக்களால் தொண்டர்கள் மத்தியில் இடம் பிடித்தவர். முரசொலி நாளிதழில் தனது கட்டுரைகள் மூலம் இளைஞர்கள் மத்தியில் எழுச்சியை கொண்டு வந்தவர்.

தமிழக முதல்வர் அவர்கள் கூறுவது போல முரசொலி செல்வம் அவர்கள் கொள்கை செல்வமாக திகழ்ந்தவர்.

பத்திரிக்கை துறையில் 50 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி வந்தவர். அவரது மறைவு ஈடு செய்ய முடியாதது. முரசொலி செல்வம் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர்கள், நண்பர்கள், கழகத்தினருக்கும், பத்திரிகை துறையினருக்கு சமத்துவ மக்கள் கழகம் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு எர்ணாவூர் நாராயணன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.